முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 797**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

04.12.2021, சனிக்கிழமை

1. ஞானசக்தியே அரங்கா போற்றி
ஞானச் சுடரே தேசிகா போற்றி
ஞானபண்டிதன் சுப்ரமணியர் யானும்
நாட்டிடுவேன் அரங்கன் உமக்கு ஞானஅறிவுரை ஆசி
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 18ம் நாள், 04.12.2021 சனிக்கிழமை)
2. ஆசியதும் அரங்கன் கரம்பட்ட
அகிலத்தார் அனைத்து பேர்களுமே
வாசி யோகம் பெற்று சிறக்கக் கூடும்
வணங்கி அரங்கன் தர்மத்தை உலகினில் செய்து
3. செய்துமே தர்மபலம் கூட்டும் மக்களெல்லாம்
சிவராஜயோகி அரங்கன் தயவாலே
ஐயம் தீர்ந்துதெளிவு திடமோடு
அழியாமை பெற்று சிறக்க நேரும்
4. நேர்மைகொண்டு அரங்கன் சீடர்களென
நிலவுலகில் எங்கு தர்மத்தை செய்து வருகின்றனரோ
பார்த்துரைக்க அவர்களெல்லாம் ஞானிகளாகி
பாருலகில் ஞானவான் எனும் பட்டம் கூடி சிறப்பர்
5. சிறக்கவே அரங்கன் தர்மமும் சித்தி தருகின்ற அரங்கன் தயவும்
நேர்த்தியாக உலகை ஆண்டு வர நிலவுலகில் அரங்கன் தொடர்பு தொண்டு கூட்டி
பெருமளவில் முருகப்பெருமான் என் வழிபாட்டை
பிசகில்லா செய்து வருபவர்கள் மூலம்
6. மூலமாகவே இந்த அற்புதத்தை நடத்துவேன்
முழுமையான ஞான யுகமாற்றமும் தந்து அருள்புரிவேன்
அருளாக அறமாக ஆக்கத்தின் மகா சூட்சுமமாக
பெருமளவில் உலகினில் மாதர்மத்தை பிசகின்றி செய்து வரும்
7. அரங்கன் சீடர்கள் மூலமாகவே
ஆகவே உலகமாற்றம் செய்து
ஆறுமுகன் யான் கலியுகத்தை ஞானயுகமாக்குவேன்
அறிவித்த ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–